**SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE**

Autonomous

*A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust*
*and Affiliated to University of Madras / Accredited by NAAC with 'A' Grade*

*ENATHUR, KANCHIPURAM - 631 561.*
*Phone : 044-27264066*
*Mail : admin@sankaracollege.edu.in*
*Website : www.sankaracollege.edu.in*

24/09/2021

**MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES**

**Department** : Tamil

**Venue** : Online Mode

**Meeting ID** : https://meet.google.com/mgg-oujf-nyr

**Date** : September 24, 2021

**Agenda** : Approval of Regulations and Syllabus for B.A. Tamil, Part-I Tamil, Basic Tamil and Advanced Tamil for UG courses to take effect from 2022-2023.

**The following members were present in the meeting:**

1. **Dr. G. PALANI**, M.A., M.Phil.,Ph.D Professor and Head, Department of Tamil Literature, University of Madras, Chennai - 5- External Subject Expert Member nominated by the Vice-Chancellor
2. **Dr. K. SIVAKUMAR,** M.A., M.Phil.,Ph.D Associate Professor, Department Of Tamil, ThiruKolanjiyappar Government Arts College, Vridhachalam, Cuddalore District - 606 001.- External Subject Expert
3. **Dr. J. RADHAKRISHNAN,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor & Head, Department Of Tamil, Sri SankaraArts and Science College, Enathur, Kanchipuram - Chairman.
4. **Dr. G. JAYASHREE,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor, Department Of Tamil, SriSankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.
5. **Dr. S. RAMESH,** M.A., Ph.D., Assistant Professor, Department Of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.
6. **Mr.S. NEELAMEGAN,** M.A., M.Phil., Assistant Professor, Department Of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

24/9

7. **Dr. N. APPADURI,** M.A., M.Phil., Ph.D., Assistant Professor, Department Of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

8. **Kalaimamani V.K.T. BALAN,** Chairman & managing Director, Madura travel service (p) Ltd, Editor & Pubulisher, Madura welcome, 25-3, Gandhi Irwin Road, Egmore, Chennai – 600008 - Representative from Industry.

9. **Mr. K. SARAVANAN,** No. 3 main road, dhamalvilagae, Kanchipuram - 631 551. - U.G.Graduate Alumnus

10. **Dr. K.R. VENKATESAN,** Principal, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Dr. O. MUTHIAH**, M.A., M.Phil.,Ph.D., Professor and Head, Department of Tamil, The Gandhigram Rural Institute - Deemed to be University, Gandhigram - 624 302 Dindigul District. - External Subject Expert

*முந்தைய பாடத்திட்டக்குழுக் கூட்டங்களின் பரிந்துரைகளின்படியும் மாற்றியமைக்கப்பெற்றுள்ள சென்னைப் பல்கலைக்கழக மொழிப் பாடத் திட்டத்தைத் தழுவியும் புதிய சூழல்களையும் பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் தமிழ்நாடு அரசு உயர்கல்வி மன்றப் பரிந்துரைகளின் படியேயும் மத்திய, மாநில அரசுகள் நடத்தும் பல்வேறு போட்டித்தேர்வுகளின் பாடத்திட்டங்களைக் கருத்தில்கொண்டும் 2022-23 நடைமுறைக்கு வருவதான* ***பகுதி 1 – தமிழ் மொழிப்பாடம் மற்றும் அடிப்படைத்தமிழ், சிறப்புத்தமிழ், இளங்கலைத்தமிழ்*** *ஆகியவற்றுக்கான புதியப் பாடத்திட்டம் பாடத்திட்டக்குழுவின் முன் வைக்கப்பெற்று, ஏற்பளிக்கப்பெற்றது. அதன் சாரம் பின்வருமாறு அமைகிறது.*

1. *இளநிலைப் பாடப்பிரிவுகளில் ஓராண்டு மொழிப்பாடம் பயிலுவோரும் இரண்டு ஆண்டுமொழிப்பாடம் பயிலுவோருமாக இருவேறுபட்ட திறத்தாருக்கும் ஒரே மொழிப்பாடத்தை அமைக்கும்போது ஓராண்டு மொழிப்பாடம் பயிலுவோர் சில இன்றியமையாத மொழி வளமைகளை அறிமுக அளவிலும் பெறாமல் இழந்துவிடுகின்றனர். எனவே, அவ்விரு பிரிவினருக்கும் முழுமையான அளவில் மொழிப்பாட நோக்கங்கள் சென்று சேரும் வகையில்* **இரு பருவ மொழிப்பாடம், நான்கு பருவ**



24/9

**மொழிப்பாடம்** என இரண்டு தனித்தனியே பிரித்து வழங்கப்படவேண்டும் என்ற முந்தைய பாடத்திட்டக்குழு பரிந்துரைகளின் படியே புதிய பாடத்திட்டத்தில் **பகுதி 1 தமிழ்** இரண்டாகப் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியங்கள், சமய இலக்கியக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் என மொழியின் அனைத்து வளங்களையும் இரு பிரிவினரும் அறியும் வகையில் இப்பாடத்திட்டத்தில் வகைசெய்யப்பெற்றுள்ளது.

2. மாநில அரசு பணித் தேர்வுகளின் மொழிப்பாடத் தாளில் அமைந்துள்ள இன்றியமையாத மொழிப்பயிற்சிகள் பரவலாகப் பகுத்து வழங்கப்பெற்றுள்ளன.

3. அண்மையில் மாற்றியமைக்கப்பெற்ற சென்னைப்பல்கலைக்கழக மொழிப்பாடத்திட்டம் வலியுறுத்தும் வகையிலும், மொழிப்பாடத்தின் உண்மையான நோக்கங்கள் முழுமையாக மாணவர்களைச்சென்றுசேரும் வகையிலும் மொழிப்பயிற்சி, இலக்கியம், இலக்கிய வரலாறு ஆகிய மூன்று பகுதிகளும் மொழிப்பாடத் தாள்களில் சம அளவில் பகிர்ந்தளித்து அதே விகிதத்திலேயே வினாத்தாள் எடுக்கவும் வலியுறுத்தப்பெற்றுள்ளது.

4. மொழிப்பாட மாணவர்கள் இலக்கியத்தை நுகரும் போதே சமூகத்தையும் பண்பாட்டையும் வாழ்வியல் விழுமியங்களையும் பெறும் வகையிலான பாடப்பகுதிகள் சமகால இலக்கியங்கள் முதல் சங்க கால இலக்கியங்கள் வரை வல்லுநர்களால் தேர்வு செய்து ஏற்பளிக்கப்பெற்றுள்ளன.

5. கல்லூரி அமைந்துள்ள காஞ்சிபுரத்தையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் தொடர்புபடுத்தும் வகையிலும் காஞ்சிப்புலவர்கள் பாடிய சங்க இலக்கியப்பாடல்கள், நந்திக்கலம்பகம், காஞ்சிப்புராணம், தனிப்பாடல்கள் முதலானவையும் மொழிப்பாடத்திற்குள் தக்க வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

6. நாட்டுப்புற இலக்கியங்கள் தொடங்கி கவிதை, புனைகதை, கடித இலக்கியம் என பன்மையாக விரிந்திருக்கும் அனைத்துத் தமிழிலக்கிய வளங்களையும் உணரும் வகையிலும் சுயமாகத் தேடி அறியும் வாசிப்புப்பழக்கத்தைத் தூண்டும் வகையிலும் படைப்பாற்றலுக்கு இடம்தரும் வகையிலும் மொழிப்பாடம் அமைந்துள்ளது. அதே போலவே அனைத்துச் சமய நெறிகளும் அவைகள் மொழிக்குச்



24/9